# R 5893 (Page 141)

# உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர்

## YOUR BRETHREN THAT HATED YOU

"என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" – ஏசாயா **66:5**

தேவனுடைய வசனத்தின்செய்தி எவ்வளவு நேர்த்தியாகவும், புத்தியறிவுக்கு ஏற்புடையதாயும் உள்ளது! இயேசுவின் பின்னடியார்களில் அநேகர் விசுவாசத்தில் இளைஞராயிருந்து, பரிசுத்தஆவியை சிறிதளவே பெற்றிருந்து, தங்கள் விரோதிகளை பயமுறுத்தி, தேவன் பழிவாங்குவார் என அச்சமூட்டுகின்றனர். அப்போஸ்தலர்கள் யாக்கோபு மற்றும் யோவான் கூட, சமாரியப் பட்டணத்து ஜனங்கள், இயேசுவுக்கும் அவரது பூஷருக்கும் அப்பம் விற்க மறுத்தபடியால், அழித்துவிடும் என்றனர். ஆனால் இயேசு தம்மை மரணபரியந்தம் உபத்திரவப்படுத்தினவர்களைப் பார்த்தோ அல்லது அவரது பின்னடியார்கள் தங்களை உபத்திரவத்துக்கு உள்ளாக்கினவர்களைப் பார்த்து அச்சுறுத்தினதாகவோ வேதாகமத்தில் ஒரு வார்த்தையாகிலும் காணப்படவில்லை. "அவர்களோ வெட்கப்படுவார்கள்" என்பதே அவர்களுக்கு சொல்லப்பட்ட எளிமையான வார்த்தையாய் இருந்தது. தானியேல் தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் பிரகடனம் பண்ணினார்;

"பூமியின் தூளிலோ நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகர்... விழித்து எழுந்திருப்பார்கள்". சிலர் பரிசுத்தவான்களாக மகிமையடைந்த சபையாக, ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல பிரகாசிக்கிறவர்களாகவும், மற்றவர்களோ நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்குமாக அவமானமடையும்படி எழுந்திருப்பார்கள் – தானியேல் 12:2,3.

இங்கு வேதாகமத்தின் பொதுமொழிபெயர்ப்பு, மேற்கூறப்பட்ட வசனத்தில் இன்னும் ஒரு படி மேலாகச் சென்று, "நித்திய நிந்தைக்கும் , இகழ்ச்சிக்குமாக அவமானப்படும்படி எழுந்திருப்பார்கள்" என்று கூறுகிறது. ஆனால் இதே வசனப்பகுதி எபிரேயமொழியில், "நிந்தையும் இகழ்ச்சியும் நீடித்திருக்கும்" என்று கூறுகிறது. அதாவது, தீமைசெய்தவன் கர்த்தருக்கு எதிராகவும் அவரது செய்திக்கு எதிராகவும் எதுவரைக்கும் நிந்தைக்குட்பட்டிருக்கிறாரோ, அதுவரைக்கும் இந்த அவமானம் நீடித்திருக்கும். தனிப்பட்ட நபரது செயல்பாடுகள் இகழ்ச்சியுள்ளதாய் இருக்கும்வரை, அந்த இகழ்ச்சி நீடித்திருக்கும். ஆனால் மறுபூரமைப்பு விரைவில் ஏற்படும்வேளையில் நம் தேவனுடைய குணாதிசயத்தையும், அவரது அரசாங்கத்தின் கோட்பாடுகளையும் ஏற்று அதில் பிரியப்படுபவர்கள், அந்த அரசாங்கத்தின் அறிவுரைகளைக் கற்று அதைப் புரிந்துகொள்ளுவதன் நிமித்தமாக, நிந்தையும் இகழ்ச்சியும் அகன்றுபோகும்.

ஆகவே, பிரியமான சகோதரரே! கிறிஸ்துவின் நாமத்தினிமித்தமாக துன்பப்பட்டோரால் மேசியாவின் ராஜ்யம் நிர்வகிக்கப்பட இருப்பதால், உபத்திரவங்களை பொறுமையோடும், மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளுங்கள். மகிழ்ந்து களிகூருங்கள் என்று நம் கர்த்தர் இதைக்குறித்தே ஆலோசனை கூறினார். கர்த்தரின் நிமித்தமாகவும், சத்தியத்தினிமித்தமாகவும் துன்பம் அனுபவிப்பவர்களாக இருந்தால், அவையனைத்தும் நித்திய வெகுமதியை நிச்சயமாய்ப் பெற்றுத்தரும். நாம் முறையாக சத்தியத்தைப் பயிற்சி செய்வோமானால், தேவனுடைய நேசகுமாரனது குணாதிசயத்தின் சாயலை பெறுவோமானால் நித்திய ஆபூர்வாதங்களை அடைவோம்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுடைய நாமங்களனைத்தும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது

----------------------